**அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி - 635 104.**

**சுற்றறிக்கை எண். 1422 / மா1 / 2024, நாள். 02.09.2024**

பொருள் : நிர்வாகம், அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர், 2024 - 2025 ஆம் கல்வியாண்டிற்கான பி.இ. முதலாம் ஆண்டு மாணவ / மாணவிகளுக்கு வகுப்புகள் துவங்குதல் மற்றும் நெறிமுறைகள் பின்பற்றுதல்- தொடர்பாக

*****

இப்பொறியியற் கல்லூரியில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டிற்கான முதலாம் ஆண்டில் சேர்ந்துள்ள மாணவ / மாணவிகள் அனைவரையும் இக்கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சார்பாக அன்புடன் வரவேற்கிறோம். மாணவ/மாணவிகள் அனைவரும் அவரவர் தேர்ந்தெடுத்துள்ள துறைகளுக்கான பாடங்களை நன்கு கற்று தேர்வாகி வாழ்க்கையில் ஒரு நல்ல அங்கீகாரத்தை பெறவும் வாழ்த்துகிறோம்.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் வரும் 09.09.2024 அன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

09.09.2024 அன்று காலை 10.00 மணி அளவில் தேர்வு செய்யப்பட்டுள்ள முதலாம் ஆண்டு மாணவ / மாணவிகள் அனைவரும் பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் (Auditorium) தங்களின் பெற்றோருடன் தாமதமின்றி வருகை புரிய வேண்டும்.

விடுதியில் சேரவுள்ள மாணவர்கள் 09.09.2024 அன்று மாணவர்களுக்கான வரவேற்பு விழா முடிந்த பின் மதியம் கலையரங்கத்தில் விடுதி சேர்க்கை( Hostel Admission) நடைபெறும். அச்சமயம் அறை ஒதுக்கீடு ( Room Allotment) செய்து தரப்படும்.

விடுதியில் தங்கி பயில உள்ள மாணவ/மாணவிகள் அனைவரும் அதற்குண்டான அனைத்து முன்னேற்பாடுகளுடன் மற்றும் தேவையான உடமைகளையும் உடன் கொண்டு வர வேண்டும்.

அதனை தொடர்ந்து 10.09.2024 முதல் 21.09.2024 வரை நடைபெறும் அறிமுக வகுப்புகள் தொடக்க விழாவில் (Induction Programme) மாணவ/மாணவிகள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

இக்கல்லூரியின் நற்பெயருக்கும், நல்ல அடையாளத்திற்கும் மாணவ/மாணவிகளான நீங்கள் அனைவரும் இக்கல்லூரியில் பின்பற்ற வேண்டிய பின்வரும் நெறிமுறைகள் (ம) பொறுப்புகள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் ஒழுக்கமும், நற்பண்புகளும் மற்றும் சமத்துவமும் நிறைந்த சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

1. **கல்லூரிக்கு வருகை புரியும் மாணவ/மாணவிகள் அனைவரும் காலம் தவறாது உரிய நேரத்திற்குள் கல்லூரிக்கு வருகை புரிய வேண்டும். கல்லூரிக்கு வருகை புரிந்த பின்னர் எக்காரணத்தைக் கொண்டும் மாணவ/மாணவிகள் கல்லூரியிலிருந்து வெளியே செல்லக் கூடாது. மாலை வகுப்புகள் முடிந்த பின்னரே கல்லூரியை விட்டு செல்ல வேண்டும்.**

2. அவசரநிலை காரணமாக வீட்டிற்கு செல்லும் மாணவர்கள் தங்களின் பெற்றோர் / பாதுகாவலரின் கோரிக்கையின் அடிப்படையில் இக்கல்லூரி சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்கள் / முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்றால் மட்டுமே கல்லூரிக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
3. ஏதேனும் அவசர பணியின் காரணமாக விடுப்பு எடுக்க நேர்ந்தால் வகுப்பு ஆசிரியர் மற்றும் துறைத் தலைவரின் அனுமதி பெற வேண்டும்.
4. கல்லூரிக்கு வருகை புரியும் மாணவ / மாணவிகள் நேர்த்தியான உடைகளை அணிந்து வர வேண்டும்.
5. அணியும் உடைகள் சீராகவும், நேர்த்தியுடனும் தைக்கப்பட வேண்டும். மாணவர்கள் **ஜீன்ஸ்** (Jeans) மற்றும் டி-சர்ட்டு உடைகளையும், மாணவிகள் **லெக்கின்ஸ்** (Leggins) போன்ற உடைகளையும் அணிவதற்கு அனுமதி இல்லை.
6. கல்லூரிக்கு வருகை புரியும் மாணவ / மாணவிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அடையாள அட்டையை (Identity Card) கட்டாயம் அணிந்து வர வேண்டும்.
7. மாணவ/மாணவிகள் சிகை அலங்காரத்தினை முறையாக பராமரிக்க வேண்டும். அதிகப்படியான சிகை அலங்காரங்களுடன் வரும் மாணவ/மாணவிகள் கல்லூரிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
8. பேருந்து நிலையத்திலிருந்து கல்லூரிக்கு பேருந்தில் வரும் மாணவ/மாணவிகள் பேருந்தில் ஒழுக்கத்தினை கடைபிடிக்க வேண்டும். பேருந்து படிகளில் தொங்கிக் கொண்டு பயணம் செய்யக்கூடாது. பேருந்தில் பயணம் செய்யும் சக மாணவர்களிடம் கேலி, கிண்டல் செய்வது மற்றும் தவறான வார்த்தைகளை உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும்.
9. கல்லூரிக்கு வரும் முன்னரும், கல்லூரி நேரம் முடிந்த பின்னரும், கல்லூரி வளாகத்தின் வெளியில் குழுவாக நின்று கொண்டு பேசுவதை தவிர்க்க வேண்டும்.
10. கல்லூரிக்கு உள்ளேயும். வெளியேயும் சாதி, மத, பேதங்களை உருவாக்கும் விதத்தில் பேசவோ, செயல்படவோ கூடாது (ம) வன்முறையில் ஈடுபடவோ கூடாது.
11. பாலினம், சாதி, இனம், மதம், மொழி, இயலாமை, திருமணம், குடும்பநிலை, உடல் மற்றும் மனநிலை குறைபாடு, பாலின அடையாளம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல் கூடாது. மீறினால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தேவைப்பட்டால் கல்லூரி இடைநீக்கம் (அ) கல்லூரி நீக்கம் செய்வதற்கு வழி வகுக்கும்.
12. **இக்கல்லூரி வளாகம் மற்றும் விடுதிக்குள் புகைபிடிப்பது, மது அருந்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், நச்சுபானங்கள் / போதைப் பொருட்களை உட்கொள்வது / வைத்திருப்பது தண்டனைக்குரிய செயலாகும். சம்மந்தப்பட்ட மாணவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இக்கல்லூரி / விடுதியை விட்டு வெளியேற்றப்படுவார்கள் மேலும் போதைப் பொருள்களை உபயோகப்படுத்தும் மாணவ/ மாணவிகள் காவல்துறை வசம் ஒப்படைக்கப்படுவார்கள். மேலும் விடுதி காப்பாளர் அளிக்கும் அறிவுரைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.**
13. இக்கல்லூரி விடுதிக்குள் ஒவ்வொரு மாணவரும் ஒழுக்கமான மற்றும் கண்ணியமான நடத்தையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

14. மாணவ / மாணவிகள் நன்னடத்தையின் அடிப்படையிலேயே தொடர்ந்து விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

15. தங்களுடைய தனிப்பட்ட உடமைகளை பத்திரமாக பாதுகாத்து கொள்ள வேண்டும்.

16. மாணவர்கள் வகுப்பறையினை விட்டு வெளியேறும்போது மின்விசிறிகள் மற்றும் விளக்குகள் அணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

17. கல்லூரி வளாகத்திற்கு வெளியே செல்லும்போதும் உள்ளே வரும்போதும் வாயிற் காவலர்களின் ( Watchman)அறிவுரைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

18. **கல்லூரி வளாகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மாணவ/மாணவிகள் பகவடிதையில் (Ragging) கண்டிப்பாக ஈடுபடக்கூடாது மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பாலியல் துஷ்பிரயோகம்/துன்புறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சம்பந்தப்பட்ட மாணவர்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு காவல் துறை வசம் ஒப்படைக்கப்படுவார்கள்.**

19. கல்லூரி வளாகத்தினை தூய்மையாக வைத்திருக்க மாணவ/மாணவிகள் ஒத்துழைக்க வேண்டும். பயிலக வளாகத்திற்குள் கண்ட இடங்களில் குப்பைகளை போடுவதை தவிர்க்க வேண்டும். உணவருந்தும் இடங்களை தூய்மையாக வைக்க வேண்டும்.

20. கல்லூரி வளாகத்திற்குள் உள்ள அரசு சொத்துக்களுக்கு சேதாரம் ஏற்படும் விதங்களில் செயல்படக்கூடாது. நாற்காலி (Chair), மேசை (Table), குழல் விளக்கு (Tube Light), Switch, கதவு, ஜன்னல் கண்ணாடி மற்றும் தாழ்ப்பாள் ஆகியவற்றினை சேதாரம் செய்யும் செயல்களில் ஈடுபடக்கூடாது. மேலும் கழிவறைகளை பயன்படுத்தும் போது சுத்தமாகவும் மற்றும் சுகாதாரமான முறையிலு பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். மீறினால் கடும் நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

21. மாணவ/மாணவிகள் வகுப்பறைகளில் கைபேசியை பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

22. மாணவ/மாணவிகள் ஆசிரியர்களின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களின் கல்வி தொடர்பான அறிவுரைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தெரிவிக்கும் யோசனைகளை பின்பற்றி நடந்து அவர்கள் அளிக்கும் பாடங்களை அன்றாடம் படித்து தேர்வுகளை சிறப்பாக எழுதி அனைத்து பாடங்களிலும் நல்ல மதிப்பெண்களை பெறுவதற்கு மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

23. மாணவ/மாணவிகளின் கல்வி நலனில் அக்கறை கொண்டு அரசு அளிக்கும் கல்வி உதவித்தொகைகளை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றும் மற்றும் இணையதளத்தில் சரியான முறையில் பூர்த்தி செய்து உரிய காலகெடுவுக்குள் அனைத்து உரிய சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

24. அலுவலகத்தில் கேட்கும் விவரங்களை மாணவர்கள் காலம் தாழ்த்தாமல் உடனடியாக அளிக்க வேண்டும். மாணவ/மாணவிகள் மிகவும் அத்தியாவசியமான ஆதார் அட்டை (Aadhar Card), குடும்ப அட்டை (Ration Card), குடும்ப வருமானச் சான்று (Income

Certificate), சாதிச் சான்று (Community Certificate), மாற்றுச் சான்று (Transfer Certificate), மதிப்பெண் சான்று (Mark Sheet) மற்றும் வங்கி கணக்கு (Bank Pass book) விவரம் ஆகியவற்றினை கட்டாயம் காலம் தாழ்த்தாமல் அலுவலகத்தில் கேட்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. எனவே மேற்காணும் சான்றுகளுக்கான நகல்களை போதுமான அளவு வைத்துக்கொள்ளவும்.

25. கல்லூரியிலிருந்து இடை நிறுத்தம் (Discontinued) செய்யும் மாணவ / மாணவிகள் தங்களின் பெற்றோருடன் வர வேண்டும். மேலும், கல்லூரி உதவித் தொகைகள் பெற்றிருந்தால் அதனை திரும்ப செலுத்திய பிறகே மாற்று சான்றிதழ்கள் வழங்கப்படும்.
26. மாணவ/மாணவிகளின் வருகை விழுக்காடு 75% சதவீதத்திற்கு குறைவாக இருந்தால் பருவத்தேர்வுகளை (Semester Exam) எழுத இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.
27. மாணவ/மாணவிகள் ஆண்டு கட்டணம் (Annual Fees) மற்றும் தேர்வு கட்டணம் (Exam Fees) ஆகியவற்றினை உரிய காலத்திற்குள் தவறாது செலுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இனிவருங்காலங்களில் பொறுப்பான மற்றும் ஒழுக்கமான இளைய தலைமுறையை தங்களின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு மூலம் மட்டுமே உருவாக்க முடியும் என்பதால் மாணவ/மாணவிகள் மேற்காணும் நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு:

**<u>மேற்காணும் நெறிமுறைகளை மாணவ / மாணவிகள் பின்பற்றுவதை கண்காணிக்கும் பொருட்டு இக்கல்லூரியில் உள்ள ஒவ்வொரு துறையிலும் ஒரு பணியாளரை நியமித்து (ஆய்வக உதவியாளர்) உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.</u>**

ஒம்/-முனைவர். ஜே. நபீசா பேகம்
முதல்வர்(மு.கூ.பொ)

பெறுநர்:-
**அனைத்து முதலாம் ஆண்டு மாணவ/மாணவிகள்.**
**நகல்:**
முதல்வர் மேசை,
**அனைத்துத் துறைத்தலைவர்கள்,**
கல்லூரி இணையதள பொறுப்பாளர் ( **<u>கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது</u>**)
முதல்வரின் நேர்முக உதவியாளர், பொருளாளர்,
கண்காணிப்பாளர், அனைத்து துறை அறிவிப்புப் பலகைகள்,
கல்லூரி இணையதள பொறுப்பாளர்
இருப்புக் கோப்பு.

29/2024.
முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசினர் பொறியியற் கல்லூரி
பர்கூர்-635 104

2/9/24